# பாடம்: புறப்பொருள் வெண்பாமாலை

## இரண்டு மதிப்பெண் வினா - விடைகள்

1. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் யார்?

விடை: ஐயனாரிதனார்

2. புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள புறத்திணைகள்?

விடை: 12 திணைகள்

3.புறப்பொருள் வெண்பாமாலையின் முதல் எது?

விடை: பன்னிருபடலம்

4. புறப்பொருள் வெண்பாமாலை தோன்றிய காலம்?

விடை: 9 ஆம் நூற்றாண்டு.

5.புறப்பொருள் வெண்பாமாலை எந்த அவைக்களத்தில் பாடப்பட்டது?

விடை: சேரர் அவைகளத்தில்

6.அகத்தியரியர் எழுதிய இலக்கண நூல் ?

விடை:அகத்தியம்

7. வெட்சித்திணையில் சூடப்படம் பூ?

விடை:வெட்சிப் பூ

8.வெட்சி அரவம் என்றால் என்ன?

விடை: வெட்சி மறவர்கள் வெட்சிப் பூவைசூடி ஆநிரை கவர முழக்கத்துடன் ஆநிரை கவர்தப் போதல்.

9.செலவு என்றால் என்ன?

விடை: பயணம்

10. வேய் என்றால் என்ன?

விடை : ஒற்றர் வழி நிலையை அறிதல்.

11. சுரத்து உய்த்தல் என்றால் என்ன?

விடை: பாலை நிலத்தின் வழி வெட்சி மறவர்கள் கவர்ந்து வந்த ஆநிரைகளுக்கு எந்த பாதிப்பும் வராமல் கொண்டு செல்லுதல்.

12.பாதீடு என்றால் என்ன?

விடை: ஆநிரைகளை பங்கிட்டுப் (பிரித்து) கொடுத்தல்

13. கொடை என்றால் என்ன?

விடை: வெட்சி மறவர்கள் தங்களுகு கிடைத்த ஆநிரைகளை, உரியவர்களுக்கு பிரித்துக் கொடுத்தல்.

14. வெட்சி படலத்தின் வகைகள் எத்தனை?

விடை: வகைகள் இரண்டு, 1. மன்னுறு தொழில், 2. தன்னுறு தொழில்

15. மன்னுறு தொழில் என்றால் என்ன?

விடை: மன்னுறு தொழில் என்பது, மன்னனிக் கட்டளையை ஏற்றுப் பகை மன்னர்களின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல்.

16. தன்னுறு தொழில் என்றால் என்ன?

விடை: மன்னனின் கட்களை இல்லாமல் மறவர் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வருதல்

17.வெட்சிப் படலத்தில் உள்ன?

விடை: பத்தொன்பது துறைகள்

18.அதரிடைச் செலவு என்றால் என்ன?

விடை: ஆநிரை கவர்ந்த வெட்சியர் சென்ற வழியில் செல்லுதல்

19.ஆளெறிபிள்ளை என்றால் என்ன?

விடை: தனி ஒருவனாகவே நின்று வெட்சி மறவரை வெட்டி வீழ்த்துதல்

20 பிள்ளையாட்டு என்றால் என்ன?

விடை: வெட்சியரின் குடலை வேலுக்கு மாலையாகச் சூட்டி மகிழ்ந்து ஆடுதல்

21.கையறுநிலை என்பது யாது?

விடை : போரிட்டுக் களத்தில் வீழ்ந்த கரந்தை வீரனின் நிலையைப் பாணர் கூறி இரங்குதல்.

22.குடிநிலை என்றால் என்ன?

விடை : மறக்குடியின் மாண்புகளைக் கூறி போற்றுதல்

23.வஞ்சிப்படலம் என்பது யாது?

விடை : நாடு பிடிக்கும் மண்ணாசையிலான போர் தொடங்கும். பகைவரின் நாட்டைக் கவர நிகழும் படை எடுப்பைப் பற்றி விளக்குவதே வஞ்சிப் படலமாகும்.

24.குடநிலை என்றால் என்ன?

விடை: பகைவர் நாட்டின்மீது படை எடுக்க முடிவு செய்த வஞ்சி மன்னன் முன்னதாகத் தன் வெண்கொற்றக்

குடையைப் புற வீட்டுக்கு அனுப்புதல்.

25.கொற்றவள்ளை என்பது எத்திணையைச் சார்ந்தது.

விடை: வஞ்சித்திணையைச் சார்ந்தது.

26.கொற்றவள்ளை விளக்கம் தருக.

விடை : வஞ்சி வேந்தனின் வெற்றியைப் புகழ்ந்து பேசும் போது பகை மன்னரின் அழிவைப் குறித்தும் வருந்துதல்.

27.பேராண் வஞ்சி என்பது எதைக் குறிக்கும்?

விடை : வெற்றிக்குக் காரணமான வஞ்சி மறவரைப் பாராட்டுதல் தோற்ற மன்னனிடம் திறை பெறுதல்.

28. நெடுமொழி வஞ்சி கூறும் கருத்துக்கள் யாது?

விடை : பகை நாட்டவர்க்கு முன் நின்று வஞ்சி மறவன் தன் ஆண்மையை மேம்படக் கூறுதல்.

29.உழுபுல வஞ்சி என்பது யாது?

விடை: வஞ்சி வேந்தன் தான் கவரச் சென்ற நாட்டைத் தீயிட்டு அழித்ததைக் கூறுதல்.

31. மழபுல வஞ்சி என்றால் என்ன?

விடை : வேற்று நாட்டின் மீது படை எடுத்த வஞ்சிமறவர் அந்நாட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளைஅடித்தல்.

32 தழிஞ்சி அதிர்வு என்றால் என்ன?

விடை :தம் நாட்டைக் கவர வந்த வஞ்சிமறவரைக் காஞ்சி வீரர் தடுத்தல்.

33. வாள் செலவு என்றால் என்ன?

விடை : காஞ்சி மன்னனில் வாள் போர்க்களம் கொண்டு செல்ல நேர்ந்ததை விளக்குதல்

34.பேய்க்காஞ்சி என்றால் என்ன?

விடை : போர்க்களத்தில் விளுப்புண் பட்டுக் கிடப்பவனைப் பேய் ஒன்று அச்சப்படுத்துதல்.

35.நொச்சிப்படலம் விளக்கம் தருக.

விடை : உழிஞைப் பூவைச் சூடியோர் மதிலைக் கவர வரும்போது நொச்சிப்பூ சூடியோர் அதனைக் காப்பதாகும்.

36. குதிரைமறம் என்றால் என்ன?

விடை : நொச்சி வீரர்களின் குதிரைகளின் வீரத்திறத்தைக் கூறுதல்.

37.அழிபடை தாங்கள் சிறு குறிப்பு வரைக.

விடை : நொச்சி வீரர்களில் அழிந்தவர்கள் போக மற்றவர்கள் மதிலைக் காத்தல்

38.உழிஞைப்படலத்தில் எத்தனை துறைகள் உள்ளன.

விடை : இருபத்து எட்டு துறைகள் உள்ளன.

39.கந்தழி என்றால் என்ன?

விடை : கந்தழி என்பது உழிஞை வேந்தனைன் கண்ணபிரானோடு ஒப்பிட்டு விளக்குதல்.

40.மண்ணுமங்கலம் என்றால் என்ன?

விடை : கைப்பற்றிய மதிலை மணமகளாகக் கருதி உழிஞை மன்னன் மணத்தல்.

41.தும்பைப் படலம்- சிறுகுறிப்பு தருக.

விடை : தன்னுடையவலிமையை வெளிப்படுத்தக் கருதிய வேந்தன் தும்பைப் பூவைச் சூடிக் கொண்டு போரிடச் சென்றதை விளக்குவதாகும்.

42.எருமை மறம் என்பது எதைக் கூறுகிறது?

விடை : போர் களத்தில் தன்படை வீரர் புறமுதுகிட்டு ஓடத் தான் ஒருவன் மட்டும் தடுத்துப் போரிடுதல்

43. தானைநிலை என்பது எதைப் பற்றி பேசுகிறது?

விடை : போர் மேற் கொண்ட இருதிற மறவர்களின் புகழ் மேம்பட்டத் தன் ஆற்றலை ஒரு வீரன் புகழ்தல்.

44.தொகை நிலை என்றால் என்ன?

விடை : வலிமையை நிலைநாட்டப் போரிட்ட மன்னர்களும் மறவர்களும் களத்தில் மடிதல்.

45.வாகைப்படலம் குறிப்பு வரைக.

விடை : போரிட்ட வேந்தர்களில் வெற்றிபெற்றவர் வாகைப் பூவைச் சூடிக் கொள்வதை விளக்குவதாகும்.

46.அரச முல்லை என்பது எதைக்குறிக்கின்றது?

விடை : பகைவரரைப் போர்க்களத்தில் வென்ற வாகை வேந்தனின் நிலையை விளக்குதல்

47.பேராண்முல்லை –சிறு குறிப்புதருக.

விடை : போர்க் களத்தைத் தனதாக்கிக் கொள்ளும் வேந்தனின் ஆற்றலை எடுத்துக் கூறுதல்.

48.குடை முல்லை என்பது யாது?

விடை : வாகை வேந்தனின் வெண் கொற்றக் குடையின் சிறப்பினை விளக்குதல்.

49.பொருளொடு புகறல் என்றால் என்ன?

விடை : மெய்ப் பொருளை விரும்புவதை எடுத்துக் கூறுதல்

50.மூதின் முல்லை எதைக் குறிக்கின்றது?

விடை : தொன்மைக் குடியில் பிறந்த மறப்பெண்ணின் மாண்பினைக் குறிக்கின்றது.

51. பாடாண் படலத்துறைகள் மொத்தம் எத்தனை?

விடை : பாடாண் படலத்தில் மொத்தம் நாற்பத்துஏழுதுறைகள் அமைந்து இருக்கின்றன.

52.பாடாண் படல கொடிநிலை என்ற துறை எதை கூறுகின்றது.?

விடை : பாடாண் வேந்தனின் கொடியை கடவுள்களின் கொடிகளுடன் ஒப்பிட்டுக் கூறுதல்.

53.பாடாண் படல வள்ளி என்ற துறை எதைக் குறிக்கின்றது?

விடை : முருகப் பெருமானுக்காக மகளிர் வள்ளிக் கூத்து ஆடுவதைக் விளக்குகிறது இந்தத்துறை.

54.கிணை நிலை என்ற துறை எக்கருத்தை வெளிப்படுத்துகிறது.

விடை : வேந்தனின் அரண்மனையில் கிணைப்பறை கொட்டுபவனது நிலையினைக் கூறுகின்றது இந்தத்துறை.

55. செவியறிவுறூஉ என்ற துறை கூறும் கருத்து யாது?

விடை : வேந்தனுக்குச் செவியில் படும்படி நல்லவற்றை எடுத்து மொழிதல்